# எங்களைப் பற்றி

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய வேலைவாய்ப்பு சேவை வழங்குநர்களில் ஒன்றாக 20 ஆண்டுகளுக்கும் மேலாக The Salvation Army Employment Plus எனும் சேவை வேலை தேடுபவர்களை முதலாளிகளுடன் இணைத்து வருகிறது. உண்மையில், நாங்கள் 200,000 வணிகங்களில் அரை மில்லியனுக்கும் அதிகமான மக்களை வேலைகளில் சேர்த்துள்ளோம்.

வேலை தேடுபவர்களுக்கான சிறப்புப் பயிற்சி மற்றும் பலவிதமான ஆதரவுதவி சேவைகளை நாங்கள் வழங்குகிறோம், மற்றும் அர்த்தமுள்ள வேலைவாய்ப்பைக் கண்டறிய அவர்களுக்கு உதவுகிறோம்.

நாங்கள் ஓர் இலாப நோக்கற்ற சேவை என்பதால், பேரழிவால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உதவிக் கரம் தேவைப்படும் எவருக்கும் நிவாரணம் அளிக்க ஏது செய்யும் வகையில் எங்களிடம் எஞ்சியிருக்கும் எந்த உபரியும் The Salvation Army-யின் சமூகத் திட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது.


எங்கள் இருப்பிடங்கள் அல்லது பிற தகவல்களைப் பற்றி மேலும் அறிய, பார்வையிடவும்:

**www.employmentplus.com.au/job-seeker-programs/parent-pathways**

Parent Pathways திட்டங்களை நாங்கள் இப்போது **பின் வரும் மாநிலங்களில் 54 இடங்களில்** வழங்கிவருகிறோம்:



| நியூ சவுத் வேல்ஸ | தெற்கு ஆஸ்திரேலியா | விக்டோரியா |
| --- | --- | --- |



சமூகமும், சமூகத்தினருடன் உள்ள தொடர்புறவும் Zona Kelly அவர்களுடைய கலையின் மையமாக உள்ளன, இது அவரது Gumbangeri மற்றும் Worimi பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கிறது.

*Zona Kelly, NSW*-இன் *Armidale* சேர்ந்த ஆபொரிஜினிப் பூர்வகுடிக் கலைஞராவார்.

## உதவிக்கரம் தேவையா?
## உங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம்

☎ 136 123

www.employmentplus.com.au

ISAL11815

PARENT PATHWAYS PROGRAM



# உங்கள் பயணம் உங்கள் வழி

## அடுத்த கட்ட கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா, எங்கு தொடங்குவது என்று தெரியவில்லையா? எம்மால் உங்களுக்கு உதவ முடியும்.

கண் இமைக்கும் நேரத்தில் உங்களுடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதைக் காண்பீர்கள் — எல்லா நேரமும் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கும் நீங்கள் திடீரென உங்களுடைய குழந்தைகள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள். பிள்ளை-வளர்ப்புக்குச் செலவிடும் நேரம் உங்களின் உயிர்வாழும் உத்திகள், நேர மேலாண்மை மற்றும் பேச்சுவார்த்தை திறன் ஆகியவற்றைக் கூர்மையாக்கும் அதே வேளையில், உங்களின் அடுத்த படிகள் என்ன என்பதைத் தீர்மானிப்பதற்கான சமயம் வரும்போது, நீங்கள் வேலைக்குப் போகாமலிருப்பதன் காரணமாக உங்களுக்குச் சற்றுப் பதட்டம் ஏற்படக்கூடும்.

தகுதிவாய்ந்த வழிகாட்டி ஒருவரது உதவியுடன், எந்தவொரு தனிப்பட்ட, படிப்பு அல்லது பணி சம்பந்தப்பட்ட இலக்குகளில் நெகிழ்வுத்தன்மையுள்ள ஆதரவுதவிகளை நீங்கள் பெறலாம்.



# உங்களுடைய இலக்கினை நீங்கள் அடைய எம்மால் உதவ முடியும்

## Parent Pathways என்றால் என்ன?

Parent Pathways என்பது ஒரு தன்னார்வ சேவையாகும், இது தகுதியுள்ள பெற்றோர்கள மற்றும் சிறு குழந்தைகளின் பராமரிப்பாளர்களுக்கு அவர்களின் பயணத்தில் அடுத்த கட்டம் என்ன என்பதைக் கண்டறிவதற்காக தனிநபர் ஒருவருக்கென உருவாக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நிதியுதவி ஆகியவற்றை வழங்குகிறது.

பயிற்சி, படிப்பு, வேலைக்குத் திரும்பிச் செல்வது போன்ற எந்த விடயமானாலும் சரி - தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு பெற்றோருடைய தனிப்பட்ட தேவைகளின் மீதும் இந்தத் திட்டம் கவனம் செலுத்தும். தகுதிவாய்ந்த வழிகாட்டி ஒருவரது உதவியுடன், தகுதிபெறும் பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் தங்கள் படிப்பு மற்றும் தொழில் இலக்குகளை அடையாளம் கண்டு அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கான நெகிழ்வுத்தன்மையுள்ள ஆதரவுதவிகளைப் பெறலாம், மேலும் அவற்றை அவர்களின் குடும்பப் பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்திக்கொள்ளலாம்.

## யார் தகுதி பெறுவர்?

இந்தச் சேவையானது பின் வரும் வகையிலான பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கானது:

- 6 வயதுக்குட்பட்ட குழந்தை உள்ளவர்கள
- ஊதியம் பெறும் வேலையில் இல்லாதவர்கள்
- தொலைதூரப் பகுதியில் வசிப்பவர்கள்


பின்வரும் கொடுப்பனவுகளில் ஒன்றைப் பெறுபவர்கள்:

- பிள்ளை-வளர்ப்புக் கொடுப்பனவு (Parenting Payment)
- பராமரிப்பாளர் கொடுப்பனவு (Carer Payment)
- சிறப்பு ஆதரவுதவி (Special Benefit)

Centrelink கொடுப்பனவு ஒன்றைப் பெறாதவர்கள், மற்றும்:

- 22 வயதிற்குட்பட்டவர்கள்
- ஆரம்ப நிலையிலேயே பாடசாலைப் படிப்பை நிறுத்தியவர்கள் (12-ஆம் வகுப்புக் கல்வித் தகுதி இல்லாத பெற்றோர்கள்)
- பூர்வ பழங்குடியைச் சேர்ந்த பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் ஒருவர்

**இத்திட்டத்தில் பங்கேற்கும் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் அவர்கள் விரும்பும் எந்த நேரத்திலும் இத் திட்டத்தை விட்டு வெளியேறுவதற்கான, இடையோய்வு எடுத்துக்கொள்வதற்கான, அல்லது வேலைக்குத் திரும்புவதற்கான விருப்பத்தெரிவினை மேற்கொள்ளலாம்.**



# நாங்கள் உதவும் விதம்

## Parent Pathways சேவை உங்களுக்கு உதவும் சில வழிகள்:

- கல்வி மற்றும் தொழில் இலக்குகளை ஏற்படுத்திக்கொள்ள
- செயல் திட்டம் ஒன்றை உருவாக்க
- திறன் இடைவெளிகளை நிரப்ப
- நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள
- வேலை மற்றும் பிள்ளை- வளர்ப்பு ஆகியவற்றைச் சமநிலைப்படுத்திக்கொள்ள
- உள்ளூர் சேவைகள் மற்றும் செயல்பாடுகளை அணுகிப் பெற

பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் Employment Plus வழிகாட்டியைத் தவறாமல் சந்தித்துவருவார்கள். வேலைவாய்ப்பு அல்லது மேல் படிப்பிற்கான நடவடிக்கைகளைச் செய்து முடிப்பதில் உங்களுக்கு உதவ உங்களுடைய பயணம் நெடுக நாங்கள் உங்களுடன் இருப்போம். நாங்கள் உங்கள் சமூகத்தின் ஒரு அங்கமாவோம், ஆகவே உங்கள் கவலைகளைக் கருத்தில் கொள்ளவும், உங்களுக்கு ஆதரவுதவி அளிக்கவும் நாங்கள் எப்போதும் தயாராக இருப்போம்.

## எமது சேவைகள்:

- மொழி மற்றும் கல்வியறிவுத் திட்டங்கள்
- வாழ்க்கைத் தொழில் குறித்த வழிகாட்டல்கள்
- குழந்தை பராமரிப்பில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் உதவி
- வேலை சம்பந்தப்பட்டப் பயிற்சிகளுக்கான நிதியுதவி
- குடும்ப சேவைகளுக்கான பரிந்துரை
- குறுகிய-கால படிப்புகள் மற்றும் பயிற்சி

கூடுதலாக, The Salvation Army வழங்கும் பல்வேறு ஆதரவுதவித் திட்டங்கள் மற்றும் சேவைகளான Moneycare (நிதி ஆலோசனை), ஆல்கஹால் மற்றும் போதைப்பொருள் சம்பந்தப்பட்ட உதவிகள், மறுவாழ்விற்கான ஆதரவுதவிகள மற்றும் பல ஒத்தாசைகளை பங்கேற்பாளர்கள்அணுகலாம் - Employment Plus - உடன் நீங்கள் இணைவாய்ச் செயல்படுவதனால் கிடைக்கும் மற்றொரு நன்மையேயாகும் இது.

## இத் திட்டத்தில் பங்குபற்றுவதால் கிடைக்கும் 'ஈடுபாட்டு பற்றுச்சீட்டுகள்'

நீங்கள் Parent Pathways திட்டத்தில் ஈடுபாடு கொள்ளும் காலத்தில், நேருக்கு-நேர் சந்திப்புகளுக்கு நீங்கள் வருகை தரும் பொழுது, உங்களுக்கு உதவியாக 'ஈடுபாட்டு பற்றுச்சீட்டுக'ளை Employment Plus-இனால் இப்போது அளிக்க இயலும்.
எரிபொருள், மளிகை பொருட்கள் மற்றும் ஆடைகளின் விலை உயர்வுகளில் உதவும் வகையில் ஈடுபாட்டு ஆதரவுதவிப் பற்றுச்சீட்டுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. உங்கள் சந்திப்பின் போது, உங்கள் தனிப்பட்ட விருப்பத்தேர்வுகள் மற்றும் உங்களுக்கு அதிக நன்மைகளை வழங்கும் பற்றுச்சீடுகளின் வகை ஆகியன குறித்து நாம் கலந்துபேசுவோம்.

| ஆரம்ப கட்ட ஈடுபாட்டு ஆதரவுதவி - $ 100 - இற்கான பற்றுச்சீட்டு | தொடர்ந்து அளிக்கப்படும் ஈடுபாட்டு ஆதரவுதவி - $ 50 - இற்கான பற்றுச்சீட்டு |
|---|---|
| ஆரம்ப-கட்ட நேருக்கு நேர் சந்திப்பில் கலந்து கொண்ட பிறகு, இந்தத் திட்டத்தில் பங்குபற்றத் தொடங்கும் புதிய பங்கேற்பாளர்களுக்கு இது வழங்கப்படுகிறது. | நேருக்கு நேர் சந்திப்புகளில் தொடர்ந்து கலந்து கொள்ளும் தற்போதைய பங்கேற்பாளர்களுக்கு இது வழங்கப்படுகிறது. |
| ஒரு பங்கேற்பாளருக்கு $ 250 வரையிலான ஈடுபாட்டு ஆதரவுதவிப் பற்றுச்சீட்டுகள் கிடைக்கும். | |

**மேலதிகத் தகவல்களுக்கு உங்கள் Employment Plus வழிகாட்டியைக் கேளுங்கள் அல்லது 136 123 என்ற எண்ணில் எங்களை அழையுங்கள்.**